செ.வெ.எண் : 17 / ஆகஸ்ட்                                                     நாள் : 08.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# ஏர்வாடி தர்ஹா சந்தனக்கூடு திருவிழானை முன்னிட்டு 16.08.2017 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு நாள் உள்ளூர் விடுமுறை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமத்தில் உள்ள செய்யது அபுபக்கர் பாதுஷா நாயகத்தின் ஏர்வாடி தர்ஹா சந்தனக்கூடு திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு 16.08.2017 அன்று புதன்கிழமை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு நாள் உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏர்வாடி கிராமத்தில் உள்ள செய்யது அபுபக்கர் பாதுஷா நாயகத்தின் ஏர்வாடி தர்ஹா சந்தனக்கூடு திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு 16.08.2017 அன்று புதன்கிழமை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு நாள் உள்ளூர் விடுமுறை அளித்தும், அதனை ஈடு செய்யும் பொருட்டு 19.08.2017 அன்று சனிக்கிழமையினை பணிநாளாக கருதி இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் செயல்பட வேண்டும்.

இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், 16.08.2017 புதன்கிழமை அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கருவூலம், சார்நிலை கருவூலங்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களும் அரசு பாதுகாப்பிற்கான அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**